# நீ இன்று அவரைத் துக்கப்படுத்தி வெளியே தள்ளினால், சகோதரனே, அங்கே உனக்காகப் பரிந்து பேசப் போவது யார்?

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

116. சுமார் 100 வருடங்களுக்கு முன் வட அமெரிக்காவின் தென் பாகத்தில் ஒரு கிறிஸ்தவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் தானியேல் கரி. நல்ல மனிதன். தேவனுக்குகந்தவன். பரிசுத்தவான். உண்மையான கிறிஸ்தவன். ஜனங்கள் அவனைப் புகழ்ந்தனர். நேர்த்தியானவன். அவனைப் பற்றிச் சொல்லப்படும் கதை இவ்வண்ணமுள்ளது: அவன் கண்ட தரிசனத்தில் அவன் மரித்து பரலோகம் சென்றானாம். அங்கே முத்துக்களால் அலங்கரிக் கப்பட்ட ஒரு வாசலைக் கண்டு அங்கே சென்றானாம் அங்குள்ள குமாஸ்தா கதவண்டை வந்து, "நீ யார்?" என்று கேட்டான்.

117. "நான் சுவிசேஷகனாகிய தானியேல் கரி. நான் கிறிஸ்துவுக்கு ஆயிரக்கணக்கில் இருதயங்களை ஆதாயப்படுத்தினேன். பூமியில் என் வாழ்வு முடிந்து விட்டது. அங்கே எனக்கு இடமில்லை இன்று காலை இங்கே வந்துள்ளேன்" என்றான்.

118. பாவியே, இத்தகைய காலை வேளை உனக்கும் வரப்போகிறது. விசுவாசத்திலிருந்தும் நழுவிப் போகிறவனே. உனக்கும் இந்த நாள் தூரமில்லை. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தும் உங்களுக்கும் இத்தகைய நாள் ஒன்று உண்டு. தாழ்மையாகவும் சாந்தமாகவும் உன்னால் இருக்க

முடியவில்லை. நீ உன் வாழ் நாளெல்லாம் உன் ஆத்துமாவுக்காக அழுததில்லை. நீ உன் தப்பிதங்களை உணர்ந்ததில்லை. கற்பு உன்னைவிட்டு நீங்கிவிட்டது. ஆனால் இத்தகைய காலை நேரம் உன் கதவுக்கும் வர இருக்கிறது. சாந்தமான பரிசுத்த ஆவி உன் இருதயத்தைத் தட்டும் போது நீ உன் உள்மனதைப் பூட்டிவைத்திருக்கிறாய்?

119. ஆகவே தானியேல் கரி அந்த வாசலிலே நிற்க, “உன் பெயர் இங்கே இருக்கிறதா என்று பார்க்கிறோம்” என்று சொல்லி பெயரைத் தேடினார்கள். ஆனால் அந்த பிரசங்கியின் பெயர் அங்கே இல்லை. “தானியேல் கரி என்னும் பெயர் இங்கே இல்லை” என்றார்கள்.

120. “ஏன்? நான் உண்மையில் ஒரு பிரசங்கியாச்சே. நான் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினேனே. நான் நல்லதையே செய்தவனாயிற்றே.”

121. ஆனால் முத்துமாளிகையின் குமாஸ்தா, “தானியேல் கரி என்னும் பெயர் இங்கே இல்லை என்று சொல்ல வருந்துகிறேன். உமது பெயர் இங்கே இல்லை! நீர் செய்ய வேண்டியதை உமக்குச் சொல்லுகிறேன். உமக்காகப் பரிந்து பேச இங்கே எங்களுக்கு உரிமை இல்லை. வெள்ளை

சிம்மாசன நீதிமன்றத்தில் உமது நிலைமையை முறையிட வேண்டுமானால், நீர் அப்படி செய்யலாம். ஆனால் உமக்குக் கிருபை இங்கே கிடையாது. ஏனென்றால் உமது பெயர் இங்கே இல்லை. இங்கே உமக்குக் கிருபையும் இல்லை, நீர் உமது கேஸை அப்பீல் செய்ய விரும்புகிறீரா?" என்று கேட்டான்.

"அப்பீல் செய்வதை தவிர நான் வேறென்ன செய்ய முடியும்!" என்றார் தானியேல்.

122. "நீர் சென்று வெள்ளை சிம்மாசன நீதிமன்றத்தில் அப்பீல் செய்யலாம்"

123. ஒரு மணிநேரம் தானியேல் கரி ஆகாயவிரிவிலே சென்றாராம். போய்கொண்டிருக்கையில் வெளிச்சம் அதிகரித்துக் கொண்டே இருந்ததாம். அது சூரியனைவிட நூறுமடங்கு, ஆயிரம் மடங்கு அதிக வெளிச்சமாக இருந்ததாம். அவர் நடுங்க ஆரம்பித்தாராம். வெளிச்சத்தின் நடுவிலே வந்து சேர்ந்ததும் ஒரு சத்தத்தைக் கேட்டாராம்: "நீ உலகத்திலே பரிபூரணமாக சுத்தமான வாழ்வு வாழ்ந்தாயா?" (என்ற வார்த்தை வெளிச்சத்திலிருந்து வந்ததாம்).

"இல்லை. நான் முழு சுத்தத்துடன் வாழவில்லை" என்றாராம் நடுக்கத்துடன்.

“எப்பொழுதும் எல்லாருடனும் யோக்கியமாய் நடந்தாயா?”

124. “இல்லை, ஒரு சிலவற்றில் நான் யோக்கியமாக நடந்ததில்லை.”

“யோக்கியனாய் நடந்ததில்லை.”

“நீ உன் வாழ்க்கையில் எப்பொழுதும் உண்மையைப் பேசினாயா?”

125. “இல்லை, ஆம் இல்லை.... ஞாபகத்துக்கு வருகிறது.... நான் எல்லா சமயத்திலும் உண்மையை ... ஒரு சிலவற்றில் உண்மையைப் பேசவில்லை!”

126. “மற்றவருடைய பொருளை நீ அபகரித்தது உண்மைதானா? எந்த பொருளாவது? பணமாவது வேறெதுவும் உனக்கு சொந்த மில்லாதது”

127. “இல்லை .... ஆம்..... நான் மற்றவரின் பொருளை அபகரித்தது உண்மை “(தன்னை உலகத்தில் நல்ல மனிதன் என்று எண்ணியிருந்தார். ஆனால் அங்கே அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டார்!).

“அப்படியானால் நீ பரிபூரணமாக வாழவில்லை.”

“ஆம், நான் சுத்தமாக வாழவில்லை” என்றார் தானியேல் கரி.

128. தானியேல் கரி சொன்னபடி, “அந்த பெரிய வெளிச்சத்திலிருந்து திடீரென்று, “நீ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டாய்!” என்னும் வெடியைப்போல ஒரு சத்தம் புறா உட்கார்ந்திருந்த கிளையின் வழியாய் வரும் என்று எதிர்பார்த்தேன். அச்சமயத்திலே பின்பக்கத்திலிருந்து தாயின் சத்தத்தைவிட ஒரு அருமையான சத்தம் கேட்டேன். என் தாயின் முகத்தைக் காட்டிலும் அன்பான முகத்தைக் காண நான் திரும்பினேன்.” **என் பின்பக்கம் நின்றவர் அன்புடன்** “**பிதாவே இந்த தானியேல் கரி எனக்காக நின்றான். இவன் அசுத்தமாக வாழுந்தது மெய்தான். ஆனால் உலகில் எனக்காக உழைத்தான். இவன் உலகில் எனக்காக நின்றான். ஆகவே இன்று நான் இவனுக்காகப் பரலோகத்திலே நிற்கிறேன். அவனுடைய பாவங்களை என் கணக்கில் கூட்டிவிடும்**” **என்றார்.**

129. **நீ இன்று அவரைத் துக்கப்படுத்தி வெளியே தள்ளினால், சகோதரனே, அங்கே உனக்காகப் பரிந்து பேசப் போவது**

**யார்?** என்னால் இனி பிரசங்கம் செய்யக் கூடவில்லை. ஜெபத்தில் தலைவணங்குவோமாக.

130. அன்புள்ள தேவனே, மரித்த அன்புள்ள ஆட்டுக்குட்டியே, தாழ்மையான, எளிய, சாந்தமான ஆட்டுக்குட்டியே, நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் இருந்தன. ஆனால் உமக்குத் தலைசாய்க்க இடமில்லாமலிருந்தது. மகிமையின் தேவனாகிய நீர் பிறந்த போது உமக்கு உடுத்த அவர்களிடம் துணி இருக்கவில்லை.

ஓ தேவனே, நியாயத்தீர்ப்பின் நாளிலே, இன்றைக்கு என்னிடமிருக்கும் நல்ல துணிமணி என்ன பிரயோஜனமாகும்? எனக்குக் கார் இருந்து என்ன பயன்? நல்ல வீடு இருந்து என்ன பயன்? இந்த உலகத்தின் என்ன பொருள் அங்கே பயன்படும்? இவ்வுலகத்தில் நீர் சிநேகிதரற்று இருந்தீர். யாரும் உம்மை நேசிக்கவில்லை, உமக்கு உணவளிக்க யாரும் இருந்ததில்லை. உமக்கு உதவி செய்யவும் யாரும் இருந்ததில்லை. அன்று நீர், "நான் பசியாக இருந்தேன் நீங்கள் என் பசியைத் தீர்க்கவில்லை. நான் வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுக்கவில்லை" என்பீர். கர்த்தாவே, நாங்கள் வைத்திருக்கும் பொருட்களெல்லாம் அன்று எங்களுக்கு என்ன

பயன் தரப்போகின்றன? உமக்காக நாங்கள் சாட்சியாக நிற்க உதவி செய்யும். அப்பொழுது, அந்த நேரம் வரும்போது, சர்வத்துக்கும் வல்லவரும் எல்லாவற்றையும் அறிந்தவரும், எங்கும் நிறைந்தவருமாகிய உமது சமூகத்தில் இருப்போம். ஓ, தேவனே, அந்தப் பெரிய ஒளியில் அந்த புறா தன் சிறகை விரித்து உட்காரும்போது, வெளிச்சம் அந்தமில்லா எல்லைகளுக்கும் எட்டும், அப்போது அந்த வெளிச்சத்தில் நீர் உட்காருவீர்.

131. தேவரீரின் சந்நிதானத்திலே நான் தனியாக நிற்க வேண்டியிருக்கும். என் தாயும் என் தகப்பனும், என் சகோதரரும், என் சபைக்கு போதகரும் என் மனைவியும் என் குழந்தைகளும் அங்கே என்னுடனே நிற்கமாட்டார்கள். (சகோ. பிரான்ஹாம் அழுகிறார் - ஆசி) ஓ... ஓ.... தேவனே, அப்பொழுது நான் என்ன செய்வேன்? கர்த்தாவே, அப்பொழுது நான் என்ன செய்வேன்! அந்த நேரம் இன்று சூரியன் அஸ்தமிக்குமுன் வரலாம். நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்வேன்? ஓ, கிறிஸ்துவே, இன்று நான் உமக்காக நிற்பேன். நான் இன்றைக்கே முடிவு செய்தேன். நான் மற்றவர்களை இழிவாய்ப் பேசுவதை விட்டுவிட்டேன். என் கோபத்தை விட்டு விடுகிறேன். எல்லா வேற்றுமைகளையும் விட்டு விடுகிறேன் ..... கர்த்தாவே, எல்லா

வேற்றுமைகளையும் விட்டு விடுகிறேன். கர்த்தாவே, என்னிடத்திலிருக்கும் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டாவது என்னை ஏற்றுக்கொள்ளும். இன்று உம்மிடத்தில் நிற்கத் தயாராக இருக்கிறேன். எல்லாவற்றையும் இழந்து போனாலும் உம்மை விடமாட்டேன். என்னில் இருக்கும் எல்லா தன்னலத்தையும் கர்வத்தையும் வேற்றுமைகளையும் அகற்றுவீராக. உலகத்தின் எல்லா இச்சைகளையும் விட்டு, தோலுரிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக உமக்கென்று நிற்க கிருபை செய்யும். சினிமா, துர்ச்சிநேகிதரோடு கூடுதல், அவலட்சணமான உடை உடுத்துவது, மேக் அப், உதட்டுச் சாயம், நகத்தில் போடப்படும் வர்ணம் எல்லாவித அலங்காரங்களையும் விட்டு விடுகிறேன். "உலகத்தாரைப் போல் நடக்காதே; உலகத்துடன் கூடாதே; அவர்களை விட்டு வெளியே வாருங்கள்" என்றீர். ஓ, தேவனே, இன்று என் தோலை உரித்தாகிலும் என்னை உம்முடைய ஆட்டுக்குட்டியாக்கி நான் மௌனமாக இருக்கச் செய்யும். கர்த்தாவே உலக சுபாவத்தை என்னிலிருந்து உரித்து எடுத்தருளும்; நான் மௌனமாகவும் ஓடிவிடாமலும் இருப்பேன்.

## *செய்தி:* **சபையும் அதன் நிலையும்,**

ஆகஸ்டு 5, 1956, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

★★★★★